வாசிக்க: மத்தேயு 25:14-30

***“எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு பெருமை பாராட்டமாட்டோம்” (2 கொரி 10:15)***

செலுத்தித் தீர்க்காத செலவுகளையும், வங்கிக் கடன்களையும் மக்களுக்குக் காட்டி, கிட்டத்தட்ட பிச்சை கேட்கும் “விசுவாச” ஊழியர் பலரை வேதனையோடு கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறோம். இது கடவுளுக்கு மகிமையைக் கொண்டுவராது. திரும்பத் திரும்ப நினைப்பூட்டியும் செலுத்தவேண்டிய பணத்தைக் குறித்து ஒரு பதில்கூட எழுதாமலிருக்கும் சில சுவிசேஷகரைக் குறித்து இந்தியாவிலுள்ள வானொலிச் சங்கம் ஒன்று என்னிடம் வருத்தம் தெரிவித்தது. எல்லாவற்றையும் செய்ய ஆசைப்பட்டு இவ்விதச் சங்கடங்களுக்குள் மாட்டிக்கொள்ளக்கூடாது. “உங்களில் யாரானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவரவருக்குக் கடவுள் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவராய் எண்ணவேண்டும்” (ரோ 12:3).

பிரமாண்டமான திட்டங்களைத் தீட்டுவது நல்லது; ஆனால் அவற்றை முடிக்க வசதி உண்டோ இல்லையோ என்று முன்பு உட்கார்ந்து ஆகும் செலவைக் “கணக்குப் பார்க்கத்” திருமறை போதிக்கிறது (லூக் 14:28). ஊழிய விரிவு இறைவனது ஆசீர்வாதம்தான். ஆனால் கடவுளையும் மிஞ்சி ஓடுவது முறையல்ல. தாலந்துகளின் உவமையில் எல்லாருக்கும் ஒரே எண்ணிக்கையில் தாலந்துகள் தரப்படவில்லை. ஒருவருக்கு ஐந்தும், அடுத்தவருக்கு இரண்டும், அடுத்தவருக்கு ஒன்று மட்டும் கிடைத்தது (மத் 25:15). நமக்குக் கொடுக்கப்பட்ட அளவுக்கேற்றபடியே கடவுள் கணக்கு கேட்பார். சிலவேளை நாம் கடவுள் தெளிவாக நடத்தாத உயரத்திற்குக் குறிகளைக் குறித்துவிட்டு, மக்கள்முன் நமது பெயரைக் காக்க “அதையும் இதையும்” செய்து உலகின் தந்திர முறைகளில் வந்து முடிகிறோம்!

ஒருவரே எல்லாவற்றையும் செய்யவேண்டிய அவசியமில்லை. எல்லாரும் ஒன்றையே செய்யவேண்டிய கட்டாயமுமில்லை. அது கடவுளுடைய பாணி அல்ல. நமது எண்ணங்கள் மனித ரீதியாய்ச் செயல்படும்போது, மற்றவர்களைப் பார்த்து அவ்விதம் நாமும் செய்தாலென்ன என்று தூண்டப்படும்போது, உற்சாகத்தில் தவறான தீர்மானங்களை எடுக்கின்றோம். இது தேவையற்ற “சுமை.” கடவுள் நமக்குக் குறித்துள்ள இலக்கினைக் கண்டுபிடித்து அதனை எட்டிப்பிடிக்கத் தேவையான பணிகளை மட்டும் செய்வதே “சுகம்!”

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் நான் முழுநேரப் பணியாளனாய் இருந்த காலத்தில் (1975-2003) வானொலி மூலமாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் ஊழியம் செய்யக்கோரி எனக்குப் பல அழைப்புகள் அவ்வப்போது வந்தன. இதற்கான செலவுகளையெல்லாம் தாங்களே பார்த்துக்கொள்வதாகக் கூறி பலர் முன்வந்தார்கள். ஆனால் என் கையில் ஆண்டவர் தந்திருந்த முக்கியப் பொறுப்புகளுக்கே போதுமான நேரம் இல்லாதிருந்ததால் எதையும் கூட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை. ஆண்டவர் இந்தத் தீர்மானத்தைக் கனம்பண்ணினார்.

*இயேசுவின் நாட்களிலும் எண்ணற்றோர் இந்தியாவில் மீட்பின்றி மடிந்துகொண்டுதானிருந்தார்கள். ஆனால் அவர் இந்தியா வரவில்லையே!*